RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 52 பிப்ரவரி.28 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# ‘விசாரணை அமைப்புகளின் மாண்பை அடகு வைப்பதை நிறுத்த வேண்டும்’ : கேஜ்ரிவால் விடுதலை குறித்து ஸ்டாலின் கருத்து

சென்னை: பிப்.28-

“ஒன்றிய பாஜக அரசு குறுகிய கால அரசியல் லாபங்களுக்காக விசாரணை அமைப்புகளின் மாண்பை அடகு வைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்” என அரவிந்த் கேஜ்ரிவால் விடுதலை குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘ஒன்றிய பாஜக அரசு குறுகிய கால அரசியல் லாபங்களுக்காக விசாரணை அமைப்புகளின் மாண்பை அடகு வைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். சிறிதேனும் வெட்கம் கொள்ளுங்கள்.

நீதிமன்றத் தீர்ப்பின் வாயிலாக உண்மை வெளிப்படும் வரை அனைத்து நெருக்கடிகளையும் உறுதியோடு எதிர்கொண்ட மதிப்பிற்குரிய நண்பர் அர்விந்த் கேஜ்ரிவால் மற்றும் மணிஷ் சிசோடியாவுக்கு எனது பாராட்டுகள்’ எனத் தெரிவித்தார்.





டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், முன்னாள் கல்வி அமைச்சர் மணிஷ் சிசோடியா உள்ளிட்ட 23 பேரை, டெல்லி மதுபான கொள்கை வழக்கில் இருந்து டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றம் இன்று விடுவித்தது.

இதையடுத்து நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அரவிந்த் கேஜ்ரிவால், ‘‘நான் ஊழல்வாதி அல்ல. கேஜ்ரிவாலும் மணீஷ் சிசோடியாவும் முற்றிலும் நேர்மையானவர்கள் என்று நீதிமன்றம் கூறியுள்ளது. இன்று இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் நீதிமன்றம் விடுவித்துள்ளது. உண்மை வெற்றி பெறும் என்று நாங்கள் எப்போதும் கூறி வந்தோம். இந்திய சட்ட அமைப்பின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது.

அமித் ஷாவும் மோடியும் சேர்ந்து ஆம் ஆத்மி கட்சியை ஒழித்துக்கட்ட மிகப் பெரிய சதித்திட்டத்தை தீட்டினார்கள். ஆம் ஆத்மி கட்சியின் 5 பெரிய தலைவர்களை சிறையில் அடைத்தார்கள். முதல்வர் பதவியில் இருந்த ஒருவர், வீட்டில் இருந்து வெளியே இழுத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஒவ்வொரு செய்தி சேனலிலும் நாங்கள் ஊழல்வாதிகள் என்று அழைக்கப்பட்டோம். கேஜ்ரிவால் ஊழல்வாதி அல்ல. நான் என் வாழ்க்கையில் நேர்மையை மட்டுமே சம்பாதித்துள்ளேன். இன்று, கேஜ்ரிவாலும், மணீஷ் சிசோடியாவும், ஆம் ஆத்மி கட்சியும் நேர்மையானவர்கள் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

நமது அரசியலமைப்புச் சட்டத்தையும், அத்தகைய ஒரு அரசியலமைப்பை நமக்கு வழங்கிய பி.ஆர். அம்பேத்கரையும் நினைத்து நாங்கள் மீண்டும் பெருமைப்படுகிறோம். உண்மை மீண்டும் வென்றுள்ளது’’ என தெரிவித்தார்.

## ‘ஓபிஎஸ் திமுகவில் இணைய இவர்கள்தான் காரணம்’ சசிகலா வருத்தம்

சென்னை: பிப்.28-

“ஓபிஎஸ் திமுகவில் இணைந்ததற்கு தான் மட்டும்தான் அதிமுக என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு தனக்கு தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர்கள் தான் காரணம்” என சசிகலா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “தமிழக முன்னாள் முதல்வரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும், சட்டமன்ற உறுப்பினருமான ஓ.பன்னீர்செல்வத்தின் இந்த முடிவு மிகவும் துரதிருஷ்டவசமானது.

தமிழகத்திலிருந்து அகற்றப்படவேண்டிய ஒரு தீய சக்தியாக திமுக விளங்கும் நிலையில்,



தாய்க் கழகம் என்று நினைத்துக் கொண்டு திமுகவில் தங்களை இணைத்துக்கொள்வது ஒரு தவறான முடிவாகத்தான் அமைந்துள்ளது.

ஆனால் இந்த நிலைமைகளுக்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான். அவர் வேறு யாருமில்லை. தான் மட்டும்தான் அதிமுக என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு தனக்கு தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர்கள், தன்னை சுற்றியுள்ளவர்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள், திமுகவினரின் முழு கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள அனைவரையும் வெளியேற்றி விட்டு எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதாவின் கொள்கைகளுக்கு விரோதமாக தொடர்ந்து செயல்பட்டுவரும் துரோகிகளின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது.

இந்நிலையில் வரும் சட்டமன்றத் தேர்தலில் எனது தலைமையில் எம்ஜிஆரின் ரத்தத்தின் ரத்தங்களும், ஜெயலலிதா வழிவந்த சிங்கங்களும் எதிரிகளையும் துரோகிகளையும் வீழ்த்துவது உறுதி” எனத் தெரிவித்தார்.

## ‘அதிமுக என்றால் இனி இபிஎஸ்தான்’ ; திமுகவில் இணைந்து ஓபிஎஸ் ஒப்புதல் வாக்குமூலம்! ஆர்.பி.உதயகுமார்

மதுரை: பிப்.28-

“இப்போது அதிமுக என்றால் எடப்பாடி பழனிசாமி என்பதை ஒப்புதல் வாக்குமூலமாக அவர்களே சொல்லிவிட்டனர். ஓபிஎஸ் மாற்றுக் கட்சியில் இணைந்ததால் எந்த விளைவோ, தாக்கமோ ஏற்படாது” என சட்டப்பேரவை எதிர்க்கட்சி துணைத் தலைவரும், அதிமுக முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், “ எம்ஜிஆர், ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அதிமுகவை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் எடப்பாடி பழனிசாமி வழிநடத்துகிறார். அதிமுக தொண்டர்கள் பழனிசாமியை முழுவதுமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.



இதில் சிலருக்கு உள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாக அவர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் பல்வேறு முகாம்களில் இணைந்து வருகின்றனர், அதுபற்றியெல்லாம் கவலைப்பட தேவையில்லை.

ஒவ்வொரு கட்சியிலும் சிலருக்கு கருத்து வேறுபாடுகள் இருப்பது என்பது புதியதல்ல. இது எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்திலேயே நடந்துள்ளது. தேர்தல் நேரத்தில் சிலர் மாற்று முகாம்களுக்கு செல்வதை மக்கள் பொருட்படுத்த மாட்டார்கள்.

இதுபோன்ற சலசலப்புகள், திசை திருப்பல்கள் நடந்துகொண்டுதான் இருக்கும். அதனை கடந்து எடப்பாடி பழனிசாமி வெற்றிவாகை சூடுவார். 2026 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தலைமை தாங்கியுள்ள இபிஎஸ் வெற்றிபெற்று முதல்வராவார்.

இதுவரை அதிமுக உரிமை மீட்புக் குழு என ஒரு குழப்பமான நிலையை தான் தமிழக மக்களுக்கு செய்தியாக சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால், இப்போது அதிமுக என்றால் எடப்பாடி பழனிசாமி என்பதை ஒப்புதல் வாக்குமூலமாக அவர்களே சொல்லிவிட்டனர். ஓபிஎஸ் மாற்றுக் கட்சியில் இணைந்ததால் எந்த விளைவோ, தாக்கமோ ஏற்படாது” என்றார்.



## ஜெயலலிதா பிறந்த நாள்: கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் பிறந்த 22 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்

### சட்டமன்ற உறுப்பினர் கேபி முனுசாமி வழங்கினார்

கிருஷ்ணகிரி, பிப்.28

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் பிப்.24 அன்று பிறந்த 22 குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக் குமார் எம்.எல்.ஏ தலைமையில், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் பரிதா நவாப் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்ச்சியில், அதிமுக துணை பொதுச்செயலாளரும் வேப்பனபள்ளி எம்.எல். ஏவுமான கே.பி. முனுசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 22 குழந்தைகளுக்கும் தங்க மோதிரங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார், நகர செயலாளர் கேசவன், அதிமுக பிரமுகர் நவாப், மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் அசோக் குமார், ஒன்றிய செயலாளர்கள் பையூர் ரவி, கன்னியப்பன், சூர்யா, மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி செயலாளர் ஆஜி, மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர் கார்த்திக், மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் மக்பூல், மாவட்ட மாணவரணி செயலாளர் ராகுல், மாவட்ட அம்மா பேரவை தலைவர் தங்கமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேலும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோரஞ்சிதம் நாகராஜ், முனி வெங்கட்டப்பன், மாவட்ட துணைச் செயலாளர் சாகுல் ஹமீது, அதிமுக நிர்வாகிகள் சுஹேல், கே.எம். சரவணன், தாபா வெங்கட்ராமன், நகரத் துணைச் செயலாளர் குரு, மாவட்ட பிரதிநிதி கோவிந்தராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சி வழியாக, “அம்மா”வின் பிறந்த நாளை சேவைத்திட்டங்களுடன் கொண்டாடியதற்காக மருத்துவமனை நிர்வாகமும், குழந்தைகளின் பெற்றோரும் நன்றியை தெரிவித்தனர்.

## பிரேமலதா கொடுத்த தொகுதிப் பட்டியல்... திமுக கூட்டணியில் சூடுபிடிக்கும் ரேஸ்!

சென்னை, பிப்.28-

நீண்ட இழுபறிக்குப் பிறகு ஒருவழியாக திமுக கூட்டணியில் ஐக்கியமாகி இருக்கிறது தேமுதிக. இதைத் தொடர்ந்து, தொகுதிகளைக் கைப்பற்றுவதில் கூட்டணிக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள கடும் போட்டியால் அனல் தகிக்கிறது அறிவாலயம்.

இருபது ஆண்டு கால அரசியல் பகையை மறந்து, 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள முதன்முறையாக திமுகவுடன் கைகோத்திருக்கிறது தேமுதிக. அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்த பிரேமலதா, கூட்டணியை முறைப்படி உறுதி செய்தார்.

இந்தச் சூழலில்தான், எந்தெந்த தொகுதிகளில் போட்டியிட தேமுதிக விருப்பம் கொண்டுள்ளது என திமுக தலைமை கேட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, தங்களுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ள தொகுதிகளின் பட்டியலை பிரேமலதா வழங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நகர்வின் பின்னணி குறித்துப் பேசும் தேமுதிக சீனியர் தலைவர்கள் சிலர், ‘‘கூட்டணி பேச்சுவார்த்தையின்போது 12 தொகுதிகள் வேண்டும் என பிரேமலதா பிடிவாதம் காட்டினார். அதற்கு ஸ்டாலின், ‘தற்போதைய நிலவரப்படி 6+1 தொகுதிகள் மட்டுமே ஒதுக்க முடியும். கூட்டணிக் கட்சிகள் யாராவது வெளியேறினால் 8 தொகுதிகள் வரை கிடைக்க வாய்ப்புள்ளது.

நாங்கள் உங்களுக்கு வெறும் சீட் கொடுக்கவில்லை; வெற்றியையும் சேர்த்து எம்.எல்.ஏக்களையே கொடுக்கிறோம். எவ்வளவு சவால்கள் வந்தாலும் உங்கள் வெற்றி உறுதி’ என நம்பிக்கை அளித்தார். மேலும்,



‘உங்களுக்கு விருப்பமான தொகுதிகளின் பட்டியலைக் கொடுங்கள், நாங்கள் ஆய்வு செய்துவிட்டு இறுதி முடிவைச் சொல்கிறோம்’ எனத் தெரிவித்தார்.

இதையடுத்து பிரேமலதா வழங்கிய பட்டியலில், தனது சகோதரர் சுதீஷுக்கு ராஜ்யசபா சீட் வேண்டும் எனக் கேட்டுள்ளார். மேலும், தனக்கு ரிஷிவந்தியம் அல்லது விருத்தாச்சலம்; விஜய பிரபாகரனுக்கு விருதுநகர் அல்லது சாத்தூர்; எல்.வெங்கடேசனுக்கு விழுப்புரம் அல்லது விக்கிரவாண்டி; பார்த்தசாரதிக்கு விருகம்பாக்கம்; அனகை முருகேசனுக்கு பல்லாவரம்; இளங்கோவனுக்கு பாப்பிரெட்டிப்பட்டி; அழகாபுரம் மோகன்ராஜுக்கு சேலம் தெற்கு என உத்தேசப் பட்டியலைக் கொடுத்துள்ளார்.

இது குறித்து திமுக மற்றும் மற்ற கூட்டணிக் கட்சிகளுடன் ஆலோசித்துவிட்டுப் பதில் சொல்வதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்’’ என்றனர் தேமுதிக சீனியர் தலைவர்கள். மறுபுறம், தேமுதிக கூட்டணிக்குள் வருவதற்கு முன்பே அந்தத் தொகுதிகளைக் குறிவைத்து காய் நகர்த்தி வந்த திமுக நிர்வாகிகள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர்.


இது குறித்து ஆதங்கப்படும் திமுக சீனியர்கள், “கடந்த முறை விருத்தாச்சலம் கூட்டணிக் கட்சியான காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டது, அங்கு ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏவாக இருக்கிறார். ரிஷிவந்தியத்தில் இரண்டு முறை திமுகவின் கார்த்திகேயன் வெற்றி பெற்றுள்ளார். இவர்கள் இருவரும் மீண்டும் அதே தொகுதியை எதிர்பார்த்து வேலை செய்து வருகிறார்கள்.

அடுத்ததாக, விருதுநகரில் மூன்றாவது முறையாக திமுகவின் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் இருக்கிறார். சாத்தூரில் கூட்டணிக் கட்சியான மதிமுகவின் ரகுராமன் இருக்கிறார். இந்த முறை விருதுநகருக்கு சீனிவாசனும், சாத்தூருக்கு மீண்டும் ரகுராமன் அல்லது மதிமுக முன்னாள் எம்.பி சிப்பிப்பாறை ரவிச்சந்திரனும் காய் நகர்த்தி வருகிறார்கள். விழுப்புரத்தில் திமுக எம்.எல்.ஏ டாக்டர் லட்சுமணன் இருக்கும் சூழலில், முன்னாள் அமைச்சர் பொன்முடியும் அங்கு சீட் எதிர்பார்க்கிறார்.

விக்கிரவாண்டியில் திமுக சார்பில் வென்ற புகழேந்தி மறைவுக்குப் பின் நடந்த இடைத்தேர்தலில் அன்னியூர் சிவா வெற்றி பெற்றார்; அவரும் மீண்டும் போட்டியிடத் தயாராக உள்ளார். விருகம்பாக்கத்தில் பிரபாகர் ராஜா மீண்டும் சீட் எதிர்பார்க்கும் நிலையில், கே.கே.நகர் தனசேகரன், காசி முத்துமாணிக்கம் ஆகியோரும் ரேஸில் இருக்கிறார்கள். இதேபோல் பல்லாவரத்தில் இருமுறை வென்ற திமுக நகரச் செயலாளர் கருணாநிதி தீவிரமாக வேலை செய்து வருகிறார்.

பாப்பிரெட்டிப்பட்டியில் கடந்த முறை போட்டியிட்டுத் தோல்வியடைந்த டாக்டர் எம்.பிரபு ராஜசேகர் மீண்டும் வாய்ப்பு எதிர்பார்க்கிறார். இதுதவிர தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் பழனியப்பனும் ரேஸில் உள்ளார். சேலம் தெற்கில் மூன்றாவது முறையாக அதிமுக வென்றுள்ள நிலையில், கடந்த முறை போட்டியிட்ட திமுகவின் சரவணன் மீண்டும் சீட் எதிர்பார்க்கிறார்; அதேசமயம் உதயநிதியின் தீவிர ஆதரவாளரான பி.கே.பாபுவும் அங்கு முயற்சிக்கிறார்.

இப்படியாக ஏற்கெனவே திமுக மற்றும் கூட்டணிக் கட்சியினர் முட்டி மோதும் தொகுதிகளில்தான் தேமுதிக கால் பதிக்கிறது. எனவே, தேமுதிக கேட்கும் தொகுதிகள் அவர்களுக்குக் கிடைத்தால், அங்கு இவ்வளவு காலம் உழைத்தவர்கள் ஏமாற்றத்தைச் சந்திப்பார்கள். அவர்களுக்கு மாற்றுத் தொகுதி கிடைக்குமா அல்லது தேமுதிகவின் பட்டியல் மாறுமா என்பதுதான் தற்போது அறிவாலயத்தில் அனலைக் கிளப்பியிருக்கிறது” என்றனர்.




■ பெண் குழந்தைகளின் பாலின எண்ணிக்கையை உயர்த்த சிறப்பாக செயலாற்றிய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர். அழகுமீனா முதல்வர் முக. ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.நிகழ்ச்சியில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் தலைமை செயலாளர் என். முருகானந்தம், சமூக நலத் துறை முதன்மைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல இயக்குநர் மா. செள. சங்கீதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாவட்டம்,. காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பரஞ்சேர்வழி ஊராட்சி, பரஞ்சேர்வழியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் பரஞ்சேர்வழி

திருப்பூர், பிப்.28-

திருப்பூர் மாவட்டம்,. காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பரஞ்சேர்வழி ஊராட்சி, பரஞ்சேர்வழியில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் பரஞ்சேர்வழி குருக்கன்பாளையம் சாலை முதல் தப்பயன்காடு வழியாக நொய்யல் பூச்சக்காட்டுவலசு வரை கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை திறந்து வைத்து, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் தெற்கு வலசு, சண்முகபாளையம் மற்றும் குப்பநாயக்கன் வலசு ஆகிய மூன்று குக்கிராமங்களில் ஏற்கனவே உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீர் நிரப்பி குடிநீர் விநியோகம் செய்யும் பணி, பாப்பினி ஊராட்சி வரதப்பன்பாளையத்தில் தாட்கோ மூலம் ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் அறிவு சார்ந்த மையம் அமைக்கும் பணியை துவக்கி வைத்தும், வெள்ளகோயில் ஊராட்சி ஒன்றியம் வள்ளியரச்சல் சரஸ்வதி நகரில் தாட்கோ மூலம் ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் அமைக்கும் பணி, மேட்டுப்பாளையம் ஊராட்சி அமராவதி பாளையத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் அமராவதிபாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் சாலை பலப்படுத்துதல் பணி, ரூ.14.50 இலட்சம் மதிப்பீட்டில் அமராவதி பாளையம் முதல் அமராவதிபாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதி வரை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி, ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் வரட்டுக்கரை நாயக்கன் குடியிருப்பு பகுதியில் 2000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் மற்றும் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் என மொத்தம் ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளை. துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், செயற்பொறியளார் (தாட்கோ) நடராஜ், காங்கேயம் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேந்திரன், உதவி பொறியாளர் சரவணக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



## குமரியில் மழை காரணமாக ரப்பர் பால் வெட்டும் பணி நிறுத்தம்

கன்னியாகுமரி, பிப்.28-

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் கீரிப்பாறை, மாறாமலை, காளிகேசம் மற்றும் வாழையத்து வயல் சுற்று பகுதிகளில் உள்ள தனியார் ரப்பர் தோட்டங்களில் பணி பாதிக்கப்பட்டுள்ளது.

மழையால் தோட்டங்களில் நீர் தேங்கியதால் ரப்பர் பால் வெட்டும் வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கு செல்லாமல் வீடுகளில் உள்ளனர்.




■ மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் சக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முப்புலி சுவாமி திருக்கோவில் மகா சிவராத்திரி மற்றும் உற்சவ விழா முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது.தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் பி ராஜசேகரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியை வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இதில் மதுரை தேனி திண்டுக்கல் சிவகங்கை விருதுநகர் திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. மாடுபிடி வீரர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு காளைகளை அடக்கினர். இந்நிகழ்வில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா கிழக்கு வட்டாட்சியர் மனேஷ்குமார் அரசு தரப்பு வழக்கறிஞர் வீரராகவன், ஒத்தவீடு பிரவீன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முழுமையான மார்பக பராமரிப்பு, சிகிச்சைக்கான “சகி” சிறப்பு மையம்: சென்னை கி கிளேனிகல்ஸ் மருத்துவமனை துவக்கியது

## நடிகை கலைமாமணி நளினி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்த சிறப்பு மையத்தினை திறந்து வைத்தார்







சென்னை பிப்.28-

சென்னை, 25 பிப் 2026, அன்று போர்டிஸ் ஹெல்த் கேரின் ஒரு அங்கமான சென்னை கிளேனிகல்ஸ் மருத்துவமனை, "சகி"என்ற முழுமையான மார்பக பராமரிப்பு மையத்தை திறந்துள்ளது. இது மார்பக பரிசோதனை மற்றும் நோயை கண்டறிதலில் தொடங்கி அதிநவீன சிகிச்சை மற்றும் மறுசீரமைப்பு வரை அனைத்து சேவைகளிலும் வழங்கும் வகையில் திறக்கப்பட்டுள்ளது. நடிகை கலைமாமணி நளினி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்த சிறப்பு மையத்தை திறந்து வைத்தார்.

எளிதாகப் பெறும் வகையில் வழங்குவதும், விழிப்புணர்வு மற்றும் நோயை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதுமே எங்களின் நோக்கமாகும்," என்று தெரிவித்தார்.

இந்த மையம் முழுமையான மார்பகப் பராமரிப்புடன், ஒரே நாளில் அனைத்து சேவைகளையும் வழங்கும் 'ஒரே இடத்திலான தீர்வு' என்பதன் அடிப்படையில் துவக்கப்பட்டு உள்ளது என்று மார்பகப் புற்றுநோய் ஆலோசனை நிபுணர் டாக்டர் சுனிதா ஜெயராணி தெரிவித்தார்.

அறுவை சிகிச்சை புற்றுநோய் பிரிவின் மருத்துவத் தலைவர் டாக்டர் என்.எஸ். விமலாதித்தன், மார்பகப் பாதுகாப்பு முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். கதிர்வீச்சு புற்றுநோய் பிரிவின் மருத்துவத் தலைவர் டாக்டர் அஸ்மி செளந்தர்யா, குறுகிய கால அளவிலான ஐந்து நாள் கதிர்வீச்சு சிகிச்சை முறைகள் குறித்து கூறினார். மருத்துவப் புற்றுநோய் பிரிவின் மருத்துவத் தலைவர் டாக்டர் அருண் ரமணன், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மூலக்கூறு பரிசோதனைகள் மூலமாகக் குறிப்பிட்ட நோயாளிகளுக்குக் கடுமையான 'கீமோதெரபி' இல்லாத சிகிச்சையை வழங்குவது குறித்து கூறினார்.




## உதகை ஆவின் வளாகத்தில் பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற் சாலையை அரசு தலைமை கொறடா குத்து விளக்கேற்றி ஏற்றிவைத்து செயல்பாடுகளைபார்வையிட்டார்

உதகை, பிப்.28-

உதகை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை யிலிருந்து காணொலி க உதகை ாட்சி வாயிலாக, பால்வளத்துறையின் சார்பில், நீலகிரி மாவட்டம், உதகை ஆவின் வளாகத்தில், ரூ.14.41 கோடி செலவில் 1 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை திறந்து வைத்ததையொட்டி, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, இயந்திரத்தின் செயல்பாடுகளை பார்வை யிட்டார். பின்னர், அரசு தலைமை கொறடா செய்தியாளர்களிடம் தெரி வித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக, பால்வளத்துறையின் சார்பில், நீலகிரி மாவட்டம், உதகை ஆவின் வளாகத்தில், ரூ.14.41 கோடி செலவில் 1 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை திறந்து வைத்தார். பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கில் மாவட்டம் தோறும் விவசா யிகளிடமிருந்து பால் சேகரம் செய்து ஒன்றியத்திற்கு கொண்டுவரப்பட்டு, காலை பல்வேறு பரிசோதனை மேற்கொண்டு, அதன்பின் பால் பதபடுத்தப்பட்டு குளிரூட்டப்பட்டு, புதிதாக தொடங்கப்பட்ட பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையில் நொதிகள் மற்றும் நன்மை செய்யக்கூடிய நுன்னுயிர்களை கொண்டு டெர்மைசர், பாலாடைக்கட்டி குக்கர், பாலாடைக்கட்டி தயாரிக்கும் இயந்திரம் கொண்டு நாள் ஒன்றிற்கு 1.0 மெட்ரிக்டன் தரமான பாலாடைக்கட்டி உற்பத்தி செய்து நாடு முழுவதும் விற்பனைக்கு அனுப்பும் பொருட்டு இத்தொழிற்சாலையானது செயல்படும்.

நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் செயல்படும் இந்த தொழிற்சாலை பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பாலை மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்பாக மாற்றுவதன் மூலம் விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் செயல்படும். மேலும் ஆவின் நிறுவனத்தின் உயர்தர பால் உபபொருட்கள் பட்டியலில் பாலாடைக்கட்டி (சீஸ்) தயாரிப்பும் சேர்க்கப்பட உள்ளது. இது மாநிலத்தின் பால் தொழில் வளர்சிக்கும் ஏற்றுமதி வாய்ப்புகளுக்கும் புதிய பாதை உருவாக்கும் என அரசு தலைமை கொறடா அவர்கள் தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், ஆவின் பொது மேலாளர் ராஜேஸ்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பவாளர் சித்ரா, மாவட்ட முன்னொடி வங்கி மேலாளர் சதானந்த கல்கி, உதகை வருவாய் கோட்டாட்சியர்

டினு அரவிந்த், மேலாளர் (நிதி) நந்தகோபால், மேலாளர் (பொறியியல்) திருமுருகன், மேலாளர் (விற்பனை) கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்டம் வயல்பட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இறுதியாண்டு மாணவி செல்வி ஹர்ஷிதா ஸ்ரீவாஸ்தவா, கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) kapsamında பருத்தி சாகுபடியில் ‘நுனி கிள்ளுதல்’ (Nipping) தொழில்நுட்பம் குறித்து செயல்விளக்கம் அளித்தார்.75–90 நாட்களில் அல்லது 15–18 கணுக்கள் வந்தபோது செடியின் நுனியை கிள்ளுவதன் மூலம் பக்கவாட்டு கிளைகள் அதிகரித்து, பூ மற்றும் காய்களின் எண்ணிக்கை உயரும்; இதனால் மகசூல் 10–15% வரை அதிகரிக்கும் என விளக்கினார்.குறைந்த செலவில் அதிக லாபம் தரும் இந்த முறைக்கு விவசாயிகள் வரவேற்பு தெரிவித்தனர்.



■ தேனி மாவட்டம் உப்பார்பட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இறுதி ஆண்டு மாணவி ராஜலட்சுமி (RAWE), சிலேஜ் தயாரிப்பு குறித்து பயிற்சி வழங்கினார்.விவசாயி ஐயப்பன் அவர்களின் வயலில் நடைபெற்ற இந்த பயிற்சியில், கோடை மற்றும் வறட்சி காலங்களில் பசுமை தீவனக் குறைபாட்டை சமாளிக்க சிலேஜ் ஒரு சிறந்த மாற்று தீர்வாக இருப்பதை விளக்கினார். சரியான முறையில் தயாரித்தால், கால்நடைகளுக்கு தரமான தீவனம் கிடைத்து, பால் உற்பத்தி குறையாமல் பராமரிக்க உதவும் என கூறப்பட்டது.

# ரோட்டரி கிளப் ஆஃப் மதுரை சார்பில் சோலார் மின் நிலையம், கணினி ஆய்வகம் திறப்பு






மதுரை,பிப்.28-

ரோட்டரி கிளப் ஆஃப் மதுரை சார்பில் உலகளாவிய நிதி உதவித் திட்டத்தின் கீழ். மதுரை தெப்பக்குளம் மேற்கு பகுதியில் உள்ள ஸ்ரீமன் நாயகியார் வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு பல்வேறு கல்வி மேம்பாட்டு பணிகள் நிதியுதவியுடன் சோலார் மின் நிலையம், கணினி ஆய்வகம் திறப்பு, ஜென்செட் வசதி மற்றும் வகுப்பறையில் 300 இருக்கைகள்,மேஜையுடன் கூடிய 150 இருக்கைகள் குழந்தைகளுக்கான இருக்கைகள் 150 ,கணினிகள் 25 ,விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பள்ளியின் மின்விளக்குகளால் ஒளிரூட்டப்பட்ட பெயர்பலகை உள்ளிட்டவை வழங்கப்பட்டன. இதில்ரோட்டரி மாவட்ட ஆளுநர் கார்த்திக் தலைமையில் சோலார் மின் நிலையம் துவக்கி வைத்தார் மேலும், ராஜா கோவிந்தசாமி கணினி ஆய்வகத்தையும் ராகவன் சடகோபன் தலைமையில் ஜென்செட் வசதி உள்ளிட்டவை வழங்கப்பட்டன. இந்த திட்டம் மூலம் பள்ளி மாணவர்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கல்வி பயிலும் வாய்ப்பு கிடைக்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தும் வகையில் சோலார் மின் நிலையம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில் ரோட்டரி திட்ட முதன்மை தொடர்பாளர் கே.எல். ஒய். சசிதரன்,எம்.கே. ஜவஹர் பாபு, எர். டி.கே. சிவகுமார்திட்ட இரண்டாம் நிலை தொடர்பாளர்

ஈ.ஆர். குமரேசன், சுரேஷ்குமார்,குளோபல் கிராண்ட் ஆலோசகர் எஸ்.என்.வி.எம்.எம் மேல்நிலைப் பள்ளி குழு தலைவர்


பிரபாகரன், எஸ்.பி. கீதா பாரதி, வழக்கறிஞர் ராமசுப்ரமணியன் நிர்வாகிகள், பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

# நலன் காக்கும் ஸ்டாலின் முகாம் மூலம் பயனடைந்த பயனாளி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றி தெரிவித்தார்

தென்காசி பிப் 28-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (02.08.2025) அன்று சென்னை சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

இம்முகாமின் நோக்கம் ஆரம்பநிலை நோய்களை கண்டறிந்து பொதுமக்களின் வாசலுக்கே மருத்துவ சேவையை கொண்டு செல்வதாகும். 38 மாவட்டங்களில் 1256 இடங்களில் நடைபெற்ற மருத்துவ முகாம்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ பரிசோதனைகள் மற்றும் பொது சுகாதார பரிசோதனைகள் வழங்கப்பட்டது. அதனடிப்படையில், தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற 30 "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம்களில் 34,383 பயனாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் (12,788 ஆண்களும், 20,322 பெண்களும், 1 மூன்றாம் பாலினத்தவரும், ஆண் குழந்தைகள் 847 நபர்களும், பெண்



குழந்தைகள் 915 நபர்களும் அடங்குவார்கள்). 29,082 நபர்களுக்கு எடை உயர பரிசோதனைகளும், 16,038 பயனாளிகளுக்கு ணிசிநி பரிசோதனைகளும், 17,030 நபர்களுக்கு இரத்தப்பரிசோதனைகளும் மேலும் பல்வேறு உயர்தர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம் மூலம் பயனடைந்த பயனாளி தெரிவித்ததாவது. திரு.ராமச்சந்திரன், ஊத்துமலை, தென்காசி மாவட்டம்.

என் பெயர் ராமச்சந்திரன். எனது சொந்த ஊர் தென்காசி மாவட்டம் ஊத்துமலை. நான் காரக்கடை தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு 70 வயதாகிறது. நான் ஊத்துமலை ஆர்.சி.நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நலன்காக்கும் ஸ்டாலின் முகாமில் கலந்து கொண்டு எடை உயர பரிசோதனை, இரத்தப்பரிசோதனை, ணிசிநி பரிசோதனை உள்ளிட்ட 12 வகையான மருத்துவப் பரிசோதனைகளை செய்து கொண்டேன். தனியார் மருத்துவமனையில் இவ்வகையான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டால் அதிக செலவாகும். தற்போது தமிழ்நாடு அரசு இவ்வகையான பரிசோதனைகள் பொதுமக்கள் மேற்கொள்வதற்காக நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் இலவசமாகவே கிடைக்கிறது. இதனால் என்னைப்போன்ற ஏழை மக்க ளுக்கு இத்திட்டம் உதவியாக இருக்கும். இது போன்ற திட்டங்களை ஏழை மக்களுக்கு அர்ப்பணித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது நிறைந்த மனதுடன் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

# குன்னூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் மகாத்மா காந்தி பெயர் நீக்கபட்டதை கண்டித்து காங்கிரஸ் கட்சி ஆர்பாட்டம்

குன்னூர், பிப்.28-

குன்னூர் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'விக்சித் பாரத் ஜி ராம் ஜி' (VB G - RAM G) மசோதா 2025, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் ஒப்புதலைப் பெற்று அது தற்போது சட்டமாக மாறியுள்ளது.

'விக்சித் பாரத் கியாரன்டி ஃபார் ரோஸ்கர் அண்ட் அஜீவிகா மிஷன்' (வளர்ந்த இந்தியா வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாதத் திட்டம்) என்பது, ஐமுகூ (UPA) அரசு காலத்தில் செயல்படுத்தப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் (MNREGA) திட்டத்திற்குப் பதிலாக செயல்படுத்தப்பட்டு,

இந்தத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு,125 நாட்கள் உறுதியான




கூலி வேலை வழங்க உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய திட்டம், 'விக்சித் பாரத் 2047' என்ற தேசிய பார்வைக்கு ஏற்ப, கிராமப்புற வளர்ச்சிக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது என்று அரசு தெரிவிக்கிறது. ஆனால் இந்த திட்டம் முற்றிலும் தவறானது என்றும் மீண்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு என்று மாற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து இந்தியா முழுவதும் காங்கிரஸ் தரப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நீலகிரி மாவட்டம் குன்னூர் ஊராட்சி ஒன்றியம் அருகே மத்திய அரசு கொண்டு வந்துள்ள இந்த பெயர் மாற்றம் மற்றும் இந்த திட்டத்துக்கு முழு எதிர்ப்பு தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியும் இதனை மத்திய அரசு விரைவில் திரும்ப பெற வில்லை என்றால் அடுத்த கட்ட நடவடிக்கை சிறை நிரப்பும் போராட்டம் நடத்துவோம் என்று மாவட்ட தலைவர் நாகராஜ் கூறினார் இந்த ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் நாகராஜ் முன்னிலையில் காங்கிரஸ் வட்டார தலைவர்கள் சுப்புரமணி,பாலன்,சிலாம் பாபு, மற்றும் மாநில OBC அமைப்பு சதிஷ்குமார் (சந்திப்),லாரன்ஸ், தலைமையிலும் நடைபெற்றது. மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் தலைவி கோமதி, மாவட்ட மகளிர் அணி தலைவி பிரியா, மாவட்ட INTUC தலைவர் ஹிட்லர், குன்னூர் வட்டார பொறுப்பாளர் கமலா சீராளன்,குந்தா பேரூராட்சி தலைவர் நேரு, மாவட்ட காங்கிரஸ் செயலாளர் நாகராஜ் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



# பெரியகுளம் தனியார் மதுபான கூட்டத்திற்கு சீல் வைப்பு: மது பிரியர்கள் அவதி: பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் மகிழ்ச்சி

தேனி, பிப்.28-

தேனி மாவட்டம் பெரியகுளம் வைகை அணை சாலையில் உள்ள தனியார் மதுபான கூடம் செயல்பட்டு வந்தது. இந்த தனியார் மதுபானக் கூடத்தில் கூடுதல் விலைக்கு மதுபானங்கள் விற்பனை செய்வது, சட்ட விரோதமாக சில்லரை மதுபானம் விற்பனை செய்வது, மதுபிரியர்களுக்கு தரமற்ற வகையில் உணவு பொருட்கள் விநியோகம் செய்தல், அரசு விதிமுறைகளை பின்பற்றாமல் இருத்தல், மனமகிழ் மன்ற உறுப்பினர்கள் அல்லாத நபர்களுக்கு மதுபானம் விற்பனை செய்தல், மனமகிழ் மன்றம் என்ற பெயரில் விளையாட்டு உபகரணங்கள் ஏதும் இன்றி உறுப்பினர்களுக்கு விளையாட வசதி ஏற்படுத்திக் கொடுக்காமல் இருத்தல், உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் இருந்து வந்ததையடுத்து தேவதானப்பட்டி பகுதியைச் சார்ந்த சமூக ஆர்வலர் மதுரை உயர்நீதிமன்றக்கிளையில் வழக்கு தொடர்ந்ததையடுத்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை அரசு விதிமுறைகளை பின்பற்றாத தனியார் மதுபானக் கூடத்தை பூட்டி சீல் வைக்க உத்தரவிட்டது. இந்நிலையில் இரட்டை ரோஜா மனமகிழ் மன்றம் அதிகாரிகள் முன்னிலையில் பூட்டி சீல் வைக்கப்பட்டது. தனியார் மதுபானக் கூடம் அடைப்பால் இப்பகுதி பெண்கள், பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.



# விவசாயிகள் முன்னேற்றம் நோக்கி – KVKக்கு ஒருங்கிணைந்த விவசாய மாதிரி வழங்கிய மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மாணவிகள்

தேனி பிப்.28-

தேனி வட்டாரத்தைச் சேர்ந்த ஸிகிகீணி திட்டத்தின் கீழ் பயிலும் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மாணவிகள் சந்தியா, சௌந்தர்யா, ராஜலட்சுமி, ராஜலக்ஷிதா, பூஜாஸ்ரீ, ஹர்ஷிதா ஸ்ரீவாஸ்தவா, ருதிகா, ஷர்மிளி, வே.பிரியதர்ஷினி ஆகியோர் நெல் வயல் (நஞ்சை) பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த விவசாய முறையின் (Integrated Farming System - IFS) மாதிரியை உருவாக்கினர்.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்ட இம்மாதிரி, காமாட்சிபுரத்தில் செயல்படும் CEN-DECT வேளான் அறிவியல் மையம் (KVK) மையத்திற்கு வழங்கப்பட்டது.

பயிர்–மாட்டு பண்ணை–மீன் வளர்ப்பு–காளான் வளர்ப்பு–உழவர் கழிவு மறுசுழற்சி போன்ற கூறுகளை ஒருங்கிணைக்கும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த மாதிரி, இயற்கை வளங்களை திறமையாக பயன்படுத்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. நிலையான மற்றும் லாபகரமான விவசாயத்தை ஊக்குவிக்கும் முயற்சியாக மாணவிகளின் இந்த செயல் பாராட்டைப் பெற்றுள்ளது.





ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் அஇஅதிமுக கோஷ்டி பூசலால்

# இரு அணிகளாக பிரிந்து முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்த நாள் கொண்டாட்டம்

திருவள்ளூர், பிப்.28-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி அதிமுக உட்கட்சி பூசலால் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 78 வது பிறந்தநாள் நிகழ்ச்சி அண்ணா சிலை அருகிலும் எம்ஜிஆர் சிலை அருகிலும் இரண்டு அணிகளாக பிரிந்து கொண்டாடப்பட்டது அதனைத் தொடர்ந்து அண்ணா சிலை அருகில் முன்னாள் கவுன்சிலர்கள் பாபாபாய், நாதமுனி, முருகேசன்,தீபராணி சரவணன்,கோமளாபூபாலன் மற்றும் 5வதுவார்டு அவைத்தலைவர் பழனி மற்றும் அம்பலவாணன், அண்ணாமலை, லாட்டரிகுப்பன், 14வது வார்டு ஜாலிபெருமாள், தியாகு,15வது வார்டு கிளைசெயலாளர் மனோகரன் கலந்து கொண்டு திருவுரு படத்துக்கு மாலை அணிவித்து மலர்தூவி இனிப்புக்கள் வழங்கி சுமார் 500 பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள் நிகழ்ச்சி ஏற்பாடுகளை 13வது வார்டு கிளைச் செயலாளர் D.சரவணன் மற்றும் எம்.ஜி.ஆர்.இளைஞரணி தலைவர் பி.கோபி செய்திருந்தனர்.



■ மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவி ஆ. ருதிகா , தனது கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திட்டத்தின் ஒரு பகுதியாக தேனி மாவட்டம் தப்புக்குண்டு கிராமத்தில் பருத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (மிறிவி) குறித்த பயிற்சியை நடத்தினார்.இதில் பருத்தியில் பூச்சி தாக்குதலை குறைத்து, ரசாயன பூச்சிமருந்துகளின் பயன்பாட்டை சுருக்கி, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் நிலையான மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.இப்பயிற்சியின் போது பருத்தியில் காணப்படும் முக்கிய பூச்சிகள் மற்றும் அவற்றை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. இந்த பயிற்சியில் ஆரோக்கியமான விதைத் தேர்வு, பயிர் சுழற்சி, இனக்கவர்ச்சி பொறி, விளக்கு பொறி, பொறிப்பயிர் பயிரிடுதல் மற்றும் டிரைக்கோகிராமா வெளியீடு போன்ற சுற்றுச்சூழல் நட்பு முறைகள் குறித்து விளக்கப்பட்டது.மேலும், வயல் கண்காணிப்பு முறைகள், இயற்கை எதிரிகளை பாதுகாப்பது, தேவையான போது மட்டுமே குறைந்தளவு மருந்துகளை பயன்படுத்துவது போன்ற நிலையான நடைமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

# சென்னை,செங்குன்றம் ரெப்கோ நுண்கடன் நிறுவனம் கிளையின் இடமாற்றத்துடன் புதிய வளாக திறப்பு விழா புறவழி சாலை, புள்ளி லயன், எனும் இடத்தில் கோலாகலமாக திறக்கப்பட்டது

செங்குன்றம், பிப்.28-

தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஒவ்வொரு ஏழை, எளிய மகளிரின் முன்னேற்றத்திலும் பங்களிப்பினை வழங்கி வரும் ரெப்கோ நுண்கடன் நிறுவனம் 130 கிளைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் சுய உதவி குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு தேவையான திறன் வளர்ப்பு பயிற்சிகளை வழங்கி தகுதி உள்ள பயனாளிகளுக்கு நுண்கடன் வழங்குவதன் மூலம் அவர்களுடைய குடும்ப பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்களிப்பு வழங்கி வருகிறது.

செங்குன்றம் நகரில் ரெப்கோ நுண்கடன் நிறுவனம் கடந்த 15 ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில் இன்று மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய வளாகம் 26.02.2026





(வியாழக்கிழமை) அன்று ரெப்கோ வங்கியின் தலைவரும், ரெப்கோ வீட்டு வசதி நிறுவனத்தின் இயக்குநருமாகிய இ.சந்தானம் குத்து விளக்கேற்றி, பெயர் பலகையினை திறந்து வைத்து, சுமார் ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டிலான நுண்கடன் உதவிகளை மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஏ.ஜி.வெங்கடாசலம் தொடக்கவுரை வழங்கினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட வங்கியின் தலைவர், நிகழ்ச்சியின் சிறப்பு விருந்திரான இ.சந்தானம் மகளிர் சுய உதவி குழுக்கள் என்பது வெறும் சேமிப்பு மற்றும் கடன் செயல்பாடுகள் மட்டுமல்ல. அது பெண்களுடைய தன்னம்பிக்கை. பொருளாதார சுதந்திரம், சமூக முன்னேற்றத்தின் அடையாளமாகும். இன்று பல பெண்கள் தங்களது சிறு தொழில்களை தொடங்கி குடும்ப வருமானத்தை உயர்த்தி பல்வேறு வேலை வாய்ப்புகளையும் உருவாக்கி

வருகின்றனர். இது ஒரு குடும்பத்திற்கு மட்டுமல்ல. ஒரு சமூகத்துடைய வளர்ச்சிக்கும் காரணமாக இருக்கிறது. எதிர்காலத்தில் நீங்கள் அனைவரும் மிகப்பெரிய தொழில் அதிபர்களாக மாறவேண்டும் என்பதே எங்கள் நிறுவனத்தின் முதன்மை நோக்கம், அதற்கான வாழ்த்துக்களை நான் இந்த தருணத்தில் தெரிவித்து கொள்கிறேன் என்று தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் பிகேபி. பாலமுருகன் வரவேற்புரை வழங்கினார். முதன்மை தொழில்நுட்ப அதிகாரிகள், பி. ஆர்.துரை, எஸ்.வள்ளிநாயகம், முதன்மை நிதி அதிகாரி பி.செந்தில்குமார், மற்றும் நிறுவன செயலர் எஸ். யோகானந்தன் அனைவரும் கலந்துகொண்டனர். மேலும் திறப்பு விழா ஏற்பாடுகளை உதவி பொது மேலாளர் ஆர்.சீனிவாசன் மற்றும் துணைப் பொது மேலாளர் எஸ்.விமல் இவர்களுடன் இணைந்து மண்டல மேலாளர் ஜி.பிரகாஷ், கோட்ட மேலாளர்கள், பி.ஜெயந்த்குமார், பி.தண்டாயுதபாணி, முதன்மை மேலாளர் எஸ்.பழனி ஆறுமுகம், துணை மேலாளர்கள் ஆர்.நரேஷ் மற்றும் எஸ்.ஜீவானந்தம் இவர்கள் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியின் இறுதியில் கிளை மேலாளர் ஏ.ஈசாக் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.




## குன்னூரில் நீலகிரி மாவட்ட அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78;வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு பொது கூட்டம்

நீலகிரி, பிப்ப.28-

தமிழக முன்னாள் விழாவினை முன்னிட்டுமுதல்வர் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பாக பொதுக்கூட்டம் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக செயலாளர் எஸ்.கலைச்செல்வன் தலைமையில் குன்னூர் வி.பி தெருவில் உள்ள எம்.ஜி.ஆர் திடலில் பொது கூட்டம் நடைபெற்றது நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட அமமுக செயலாளர், ணிஜ். தாட்கோ வாரிய தலைவர் எஸ் கலைச்செல்வன் நகர கழக செயலாளர் எம் எஸ் சுரேஷ்மாவட்ட அவைத் தலைவர் K.N.துரைமாவட்ட இணைச் செயலாளர்சுகந்தி சிவக்குமார்ராஜேஸ்வரி குன்னூர் பொதுக்குழு உறுப்பினர்

மாவட்ட மாணவர் அணி செயலாளர் கார்த்திக் சண்முகம் இந்திராதர்மன்

ஸ்டேன்லி பிரசாத் செந்தில்குமார் செல்வராஜ் மீனவரணி மாவட்ட செயலாளர்

அ.சலீம் நூர் முகமது சேட் நகர மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள்ரமேஷ் சையத் சஜாத் வாப்புஸ்ரீதரன் முனுசாமி பாலகிருஷ்ணன் கணேசன் தாம்பட்டி செந்தில்உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சி சார்ந்த அதிமுக நீலகிரி மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் அதிமுக முன்னாள் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் சாந்தி ராமு முன்னாள் எம்பி அர்ஜுனன் மற்றும் மற்றும் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்




## தஞ்சை அருகே உதயநிதி ஸ்டாலின் அறிவாலயம் திறந்து வைத்த தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர் முரசொலி எம்எல்ஏ துரை சந்திரசேகரன்

திருக்காட்டுப்பள்ளி பிப்.28-

வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் ரூ. பதினைந்து லட்சம் சொந்த செலவில் உதயநிதி ஸ்டாலின் அறிவாலயம் திறப்பு விழா நடைபெற்றது.

திருக்காட்டுப்பள்ளி அருகே வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் திருவையாறு தெற்கு ஒன்றிய கழக தி.மு.க செயலாளர் கௌதமன் தன் சொந்த செலவில் ரூ.15 லட்சத்தில் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவாலயம் கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதை திருவையாறு சட்டமன்ற உறுப்பினரும் தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளர் துரை.சந்திரசேகரன், தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர் முரசொலி ஆகியோர் ரிப்பன் வெட்டி, குத்து விளக்கேற்றி துவக்கிவைத்தனர். நிகழ்ச்சியில் திருப்பூந்துருத்தி பேரூராட்சித் துணைத்தலைவர் அகமது மைதீன், பூதலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும் மேனாள் ஒன்றியக்குழு உறுப்பினர் கல்லணை செல்லக்கண்ணு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வெங்கடேசன், ஒன்றிய பிரதிநிதி புண்ணியமூர்த்தி, முன்னாள் ஒன்றிய குழுதலைவர் கவிதா ஜெயபால், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரெங்கராஜ், முன்னாள் கவுன்சிலர் சரிதாவினோபா, மற்றும் கட்சி நிர்வாகிகள், மகளிரணியினர், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர். பாதுகாப்பு பணியில் திருக்காட்டுப்பள்ளி ஆய்வாளர் அகிலன் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். (படவிளக்கம் வெங்கடசமுத்திரம் ஊராட்சியில் ரூ.15 லட்சம் செலவில் உதயநிதி ஸ்டாலின் அறிவாளயம் எம்.எல்.ஏ.எம்.பி. திறந்துவைத்தனர்.




## தாம்பரத்தில் பாமக மாவட்ட செயற்குழு கூட்டம். தெருமுனை கூட்டங்கள் நடத்தி மக்கள் ஆதரவு திரட்ட வலியுறுத்தல்

தாம்பரம் பிப். 28-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பாமக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைவர் கருப்பசாமி தலைமையில் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் வெங்கடேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு தேர்தல் பணிகள் குறித்து எடுத்துரைத்ததோடு, தினசரி தெருமுனை கூட்டங்கள் நடத்தி தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்களிடம் ஆதரவு திரட்ட வேண்டும் என வலியுறுத்தினார். இதில் பசுமை தாயகம் மாநில துனை செயலாளர் ஐநா.கண்ணன், இளைஞரணி நிர்வாகிகள் ரேனுகண்ணண், பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். -

## போடிநாயக்கனூர்; இரயில்வே நிலையத்தின் சுரங்க பாலத்தில் சாக்கடை கழிவு நீர்

போடி பிப்.28-

போடிநாயக்கனூர்; நகராட்சி எல்லைக்கு உட்பட்ட நகர் மன்ற உறுப்பினர் பாஜக மணிகண்டன் அவர்களுடைய 09 வது வார்டு பகுதியில் உள்ள இரயில்வே நிலையத்தின் சுரங்க பாலத்தில் சாக்கடை கழிவு நீரானது நகராட்சியின் அலட்சியத்தால் சாக்கடை வேலை ஏனோ தானோ எனதாக கமிஷன் வித் கரெப்சன் பாணியில் அரைகுறை பணியாக முடிக்கப்பட்டு அரைகுறை பணியின் காரணமாக அப்பகுதி மற்றும் நகர மக்களுக்கு தற்போது பல்வேறு நோய்ப் பிணிகள் வந்து கொண்டிருக்கின்றது.



இரயில் நிலையத்தின் சுரங்க பாதையானது முடிந்து கிட்டத்தட்ட 03 ஆண்டுகளுக்கு மேலாக இந்த பாதாள சாக்கடை கழிவு நீரும் இந்த சுரங்க பாதையில் விழுந்து இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் இந்த வழித்தடத்தை பயன்படுத்தி பாதசாரிகள் பயணிக்கும் இந்த நடைபாதையால் பொதுமக்களுக்கும் மலக்கழிவுகள் கலந்து வரக்கூடிய இந்த சாக்கடை கழிவு நீர் தீர்த்த அபிஷேகமாக மக்களுக்கு வழிந்தோடி கொண்டு இருக்கின்றது.

இதனை பலமுறை பாஜக நகர்மன்ற உறுப்பினர் மணிகண்டன் அவர்களிடம் எடுத்துக் கூறியும் கூட அவர் ஏனோ இதை சரி செய்து தர மறுக்கின்றார்.

பல வருடங்களாக கேட்பாரற்று நாதியத்து கிடக்கின்றது இந்த பகுதியானது. இதனால் இந்த சாக்கடை கழிவு நீரினால் அந்தப் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு டெங்கு மலேரியா, சிக்கன்குனியா, சிக்காத குனியா போன்று தமிழக அரசே பெயரிட முடியாத அளவிற்கு புது புது தொற்று நோய்களும் பரவிக் கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக் எது.

கமிஷன் with கரெப்சன் செயல்களில் கணக்கச்சிதமாக துரிதமாக திருவேடு பதாகை ஏந்தி மிரட்டும் Sorry செயல்படும் பாஜக 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் நகர மக்களுக்கு சொல்லில் அடங்கா சோதனைகளை கொடுத்து வரும் இந்த சுரங்கப்பாதையில் தரம் இல்லாத சாக்கடை பணியின் தாக்கத்தால் வழிந்தோடும் சாக்கடை கழிவு நீரை சரி செய்து தருவதற்கு கிட்டத்தட்ட 04 வருடங்களை தொடர்ந்து இன்றளவும் கள்ள மவுனம் சாதித்து வருகிறார்.

மேலும்,மக்கள் நலன் சார்ந்த பிரச்சனையை தனது வார்டு பகுதியில் இன்று வரை சரி செய்து கொடுப்பது கண்டு(ம்) கொள்வதே இல்லை.

இந்த சுரங்கப் பாதையானது புது காலனி, சுப்புராஜ் நகர், பரமசிவன் கோவில், ஆதிபராசக்தி கோவில், இரயில் நிலையம் போன்ற முக்கியமான இடங்களை இணைக்கக்கூடிய ஒரே ஒரு வழிப்பாதை.

இந்த ஒருவழிப்பாதையை விட்டால் இந்த வழித்தடத்தில் வேறு சுலபமான எவ்வித பாதையும் இல்லை. இந்தப் பாதை இல்லாமல் வேறு பாதையில் தான் சுற்றி செல்ல வேண்டும்.

ஆனால், இந்த 09 வது வார்டு பாஜக நகர் மன்ற உறுப்பினர் நகராட்சி ஒப்பந்தங்களில் ஆர்ப்பாட்டம் போராட்டம் என மல்லுக்கட்டி கமிஷன் வாங்கும் நோக்கில் செயல்படுகின்றாரே தவிர இந்த சுரங்கப்பாதையின் கீழ் செல்லும் கழிவுநீர் கலந்த சாக்கடையை சரி செய்து தருவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க மறுக்கிறார்.

பாஜக தரப்பில் நின்று வாக்கு வாங்கி வெற்றிக் கனியை ருசித்த 09வது வார்டு உறுப்பினரை மாவட்ட, நகர பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் இதனை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.,

அதுசமயம், 09வது வார்டு பாஜக நகர் மன்ற உறுப்பினர் இருக்கிறார் என்ற அச்சுறுத்தல் இல்லாமல் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மேற்கண்ட மக்கள் கேடு சுகாதார சீர்கேடு சார்ந்த விடயத்தை மக்கள் நலன் காத்திட வேண்டி சரி செய்து கொடுக்க வேண்டுமென நகர மக்கள் மிகவும் துன்புற்று வேதனை உடன் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## பழனியில் விசிக சார்பாக நினைவேந்தல்

திண்டுக்கல், பிப்.28-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வ உ சி மத்தி பேருந்து நிலைய வளாகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில முதன்மைச் செயலாளர் ஏ சி பாவரசம் நினைவு ஒட்டி அவரது திருவுருவப் படத்திற்கு திண்டுக்கல் மேற்கு மாவட்டம் பழனி சட்டமன்ற தொகுதி சார்பாக நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றன இக்கூட்டத்தின் தலைமையாக மாவட்ட செயலாளர் போர்க்கொடி ஏந்தி முன்னிலையாக மண்டல துணைச் செயலாளர் குமாரசாமி மாவட்டத் துணைச் செயலாளர் வாஞ்சிநாதன் ஆனந்தி அப்துல் கலாம் ஆசாத் மற்றும் விழாவின் சிறப்பு அழைப்பாளராக மண்டல செயலாளர் பேராசிரியர் ஜான்சன் கிறிஸ்டோபர் மட்டுமே நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஜெயசீலன் மற்றும் கொடைக்கானல் நிர்வாகிகள் தமிழ் புலிகள் கட்சியில் சார்பாக மாவட்ட செயலாளர் இரணியன் மண்டல செயலாளர் தர்மராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மறைந்த ஏசி பாபரசுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக பல்வேறு கோஷங்களை எழுப்பி வீரவணக்கம் செலுத்தினர் தொடர்ந்து நிகழ்வில் நிர்வாகிகள் மற்றும் தமிழ் புதிய கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்திய நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றன.






## சுங்காங்கடை தனியார் பெண்கள் கலைகல்லூரியில் பாரத் இளையோர் நிகழ்ச்சியில் பல்வேறு கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்

கன்னியாகுமரி, பிப்.28-

கன்னியாகுமரி மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் கீழ் நாடு மூழுவதும் 257மாவட்டங்களில் வளர்ச்சியடைந்த பாரதத்தின் இளையோர் பாராளுமன்றம் நிகழ்ச்சி நடைபெற்றுவருகிறது

குறிப்பாக தமிழகத்தில் 38மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுவரும் நிலையில் அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் சுங்காங்கடை பகுதியில் செயல்பட்டுவரும் ஸ்ரீ ஐயப்பா மகளிர் கலை கல்லூரியில் வளர்ச்சியடைந்த பாரதத்தின் இளையோர் பாராளுமன்றம் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மாவட்டத்தின் பல்வேறு கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் பங்கேற்று அரசியல் குறித்தாக கருத்துக்களை பேசினர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாட்டுநலப்பணிதிட்ட மண்டல இயக்குனர் சாமுவேல் செல்லையா கூறுகையில் ஒரு லட்சம் இளைஞர்களை தலைசிறந்த அரசியலில் கொண்டுவந்நு வளர்ச்சியடைந்த பாரத்தை உருவாக்கவேண்டும் என பாரத பிரதமரின் கனவு திட்டத்தின் வாயிலாக நடைற்றுவரும் நிகழ்ச்சியில் 18முதல் 25 வயதிற்குள்ளான கல்லூரி மாணவர்களுக்கு அரசியல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தலைமை பண்பை வளர்த்தவும் சமூக பிரச்சினைகளில் தீர்வு காண்பது, மக்கள் பிரநிதிநியாக மாறுவது ஜனநாயகத்ணை புரிந்துகொள்வது என்பது குறித்தான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி மாணவர்களின் பேச்சுதிறனை முன்நிறுத்தி மாவட்ட அளவில் 5பேர்தேர்வு செய்யபட்டு மாநில அளவிலான போட்டி நடைபெறும் எனவும் அதில் தேர்வு செய்யபடும் மாணவர்கள் நேடியாக பாரத பாரதமரிடம் உரையாற்ற உள்ளதாகவும் கூறினார் நிகழ்ச்சியில் ஸ்ரீ ஐயப்பா கல்லூரி நாட்டுநலப்பணிதிட்ட அலுவலர் ஸ்ரீயா நாயர்,நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக நாட்டுநலப்பணிதிட்ட அலுவலர் வேலியப்பன் மற்றும் ஐயப்பா மகளிர் கலை கல்லூரி முதல்வர் டாக்டர் பிரசன்னா குமாரி ஆகியோர் பங்கேற்றனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் திமுக அலுவலகம் திறப்பு விழா மதியழகன் எம்.எல்.ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப்.28-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் தாம்சன் பேட்டையில் நகர திமுக அலுவலக திறப்பு விழா நடைபெற்றது. நகர செயலாளர் ஜே.கே.எஸ். பாபு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி நகர திமுக அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார்.




இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, சரவணன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்கள் கே.வி.எஸ். சீனிவாசன், அன்பரசு, மாநில தொமுச துணைச் செயலாளர் மோகன், முன்னாள் நகர செயலாளர் ஜே.கே.எஸ். சாஜித், காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார், துணை பேரூராட்சித் தலைவர் மாலினி மாதையன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, கடலரசு மூர்த்தி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, முன்னாள் ஊராட்சிக்குழு துணைத் தலைவர் சசிகலா தசரா, பேரூராட்சி கவுன்சிலர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி 47வது வட்ட திமுக சார்பில் இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.கே.பாலாஜி ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தாம்பரம் பிப். 28-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி 47வது வட்ட திமுக சார்பில் 5வது மண்டல குழுத்தலைவர் தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன் தலைமையில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.கே. பாலாஜி அவர்கள் ஏற்பாட்டில், வட்ட செயலாளர் கே.டிவி. முருகன், மாநகர பிரதிநிதி கலைவாணன் ஆகியோர் வரவேற்புரையில், கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்




மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, நலத்திட்ட உதவிகள் வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி கமலக்கண்ணன், 4வது மண்டல குழுத்தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் திமுக நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர் இறுதியில் மாநகர விவசாய அணி துணை அமைப்பாளர் டி.குட்டி என்கிற ராஜி நன்றி உரையாற்றினார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161